
## இயல் 7.3 - இயற்கணிதம்

பயிற்சி எண் :: 7.3.1.2.K

இயற்கணிதம் (Algebra) - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

## இயற்கணிதம் (Algebra) - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

குணசேகரன் விளையாட்டு பொம்மைகள் விற்கும் ஒரு கடைக்குச்சென்று அவனுக்குப்பிடித்தமான மூன்று பொம்மைகளின் விலையை விசாரித்தான். அவைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மூன்று சமன்பாடுகளில் விளக்கப்படங்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளிலிருந்து உங்களால் அந்த பொம்மைகளின் விலையைக்கண்டுபிடிக்க இயலுமா?




### அனுமானங்கள் (Assumptions)

(1) விளக்கப்படங்களிலிருந்து அவற்றின் பெயர்கள் முறையே Bike, Car மற்றும் Bus எனக்கொள்க. இப்பெயர்களைக்கொண்டு மேலே கொடுக்கப்பட்டுள்ள சமன்பாடுகளை கீழே எழுதுக.

$$\text{Bike} + \text{Car} + \text{Bus} = 1220 \qquad \ldots\text{Eqn.①}$$

$$\text{Bike} + \text{Car} - \text{Bus} = 680 \qquad \ldots\text{Eqn.②}$$

$$\text{Bike} - \text{Car} - \text{Bus} = 40 \qquad \ldots\text{Eqn.③}$$

சமன்பாடு 1-ஐயும் 3-ஐயும் கூட்டினால் நமக்கு Bike-ன் மதிப்பு கிடைக்கும்....

$$(\text{Bike} + \text{Car} + \text{Bus}) + (\text{Bike} - \text{Car} - \text{Bus}) = 1220 + 40$$

$$\text{Bike} + \text{Car} + \text{Bus} + \text{Bike} - \text{Car} - \text{Bus} = 1220 + 40$$

$$2 \times \text{Bike} = 1260$$

$$\text{Bike} = \frac{1260}{2} = \boxed{630}$$

சமன்பாடு 1-ஐயும் சமன்பாடு 2-ஐயும் கூட்டுக...

$$(\text{Bike} + \text{Car} + \text{Bus}) + (\text{Bike} + \text{Car} - \text{Bus}) = 1220 + 680$$

$$\text{Bike} + \text{Car} + \text{Bus} + \text{Bike} + \text{Car} - \text{Bus} = 1900$$

$$2 \times \text{Bike} + 2 \times \text{Car} = 1900$$

மேலே உள்ள சமன்பாட்டை 2-ஆல் வகுக்கக் கிடைப்பது....

$$\text{Bike} + \text{Car} = 950$$

மேலே உள்ள சமன்பாட்டில் Bike-ன் மதிப்பை மாற்றீடு செய்கையில்...


$$630 + \text{Car} = 950$$

$$\text{Car} = 950 - 630 = \boxed{320}$$

Bike-ன் மதிப்பையும் Car-ன் மதிப்பையும் சமன்பாடு 1-ல் மாற்றீடு செய்கையில்...

$$630 + 320 + \text{Bus} = 1220$$

$$\text{Bus} = 1220 - 630 - 320 = \boxed{270}$$

 மற்றும்  ஆகிய பொம்மைகளின் விலைகள் முறையே ₹630, ₹320 மற்றும் ₹270 ஆகும்.


### Information Rights & Disclaimers

Sum & solution prepared on Thursday 28th July, 2022 :: 05:35 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.